386

386/2
53.

அசோக வாசகம்

இரண்டாம் புத்தகம்

MAY 53



TB
031(2) N53
13.9.91

...ந்தியப் பதிப்பகம்,
...-வேலூர்- பங்களூர்

அசோக வாசகம்

இரண்டாம் புத்தகம்

ஆசிரியர்

A. V. TYAGARAJAN, M.A., L.T.,
RETIRED DISTRICT EDUCATIONAL OFFICER

AND

T. V. CHENGALVARAYA MUDALIYAR,
RETIRED PROFESSOR IN TAMIL, ST. JOSEPH'S COLLEGE,
BANGALORE

அகில இந்தியப் பதிப்பகம்

கும்பகோணம், வேலூர், பெங்களூர்.

பதிப்புரிமை] 1953 [விலை அணா 6

முதற் பதிப்பு 1953

அகில இந்தியப் பதிப்பகம்
மல்லேசுவரம், பெங்களூர்.
வேலூர்—வட ஆற்காடு ஜில்லா.
கும்பகோணம்—தஞ்சாவூர் ஜில்லா.

Printed At The Rayan Press, Madras - 1.

முகவுரை

"**அசோக வாசகம்**" என்ற பெயர் இந்த வாசக வரிசைக்கு அமைந்த காரணம் முதற் புத்தக முகவுரையால் இனிது விளங்கும். இப்பெயருடன் வெளிவரும் தமிழ் வாசக வரிசையில் இது இரண்டாம் புத்தகம். சிறுவர், சிறுமியர் முதற் புத்தகத்திற் கற்றுணர்ந்தவைகளைப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் இவ்விரண்டாம் புத்தகம் இயற்றப் பெற்றுள்ளது.

வகுப்புக் கேற்றபடியும் நாளடைவில் அந்த வகுப்பிலேயே குழந்தைகள் பெறக்கூடிய அறிவு வளர்ச்சிக் கேற்றவாரும் படிப்படியான முறையில் பாடங்களும், பயிற்சிகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

நமது தமிழ் இளைஞர்கள் சுருங்கிய கால அளவில் நிரம்பிய தமிழ் அறிவு பெறுதற்கான புதிய முறையில் இப்புத்தகம் இயற்றப் பெற்றுள்ளது. தமிழ்ப் போதனை முறையில் **மொழிப்பயிற்சியே** தலையாய நோக்கமாதலின், அந்நோக்கத்தையே அடிப்படையாகக் கொண்டு இவ்வாசக வரிசையின்கண் பாடங்களும், பயிற்சிகளும் அமைக்கப் பெற்றுள்ளன. பாடங்களின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பயிற்சிகளை உதாரணங்களாகக் கொண்டு குழந்தைகளின் தகுதிக்கேற்றவாறு மேலும் பயிற்சிகள் அளித்து, மொழிப் பயிற்சியையே குறிக்கொள்ள வேண்டுமென்பது தமிழ் ஆசிரியர்களுக்கு எமது வேண்டுகோள்.

தமிழ் இளைஞர்கள் பாடம் படிப்பதை விடப் படம் பார்ப்பதிலும், பாட்டுப் பாடுவதிலும் பெரிதும

விருப்ப முடையவராதலின், பொருத்தமான படங்களும், பாட்டுக்களும் வேண்டிய அளவு இதன்கண் இடம் பெற்றுள்ளன. அரசியலார் அண்மையில் வெளியிட்ட பாடதிட்டத்திற்கிணங்க இது எழுதப் பெற்றுள்ளது. வாழ்க்கையில் முக்கியமாய்ப் பயன்படும் மௌன வாசிப்புக்கு வேண்டும் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. வாய் திறவாமல், உதடு அசையாமல், கண்ணை ஓட்டி வாசிக்கும் வகையில் குழந்தைகளுக்கு உற்சாகமும், ஊக்கமும், உண்டுபண்ணுவது நன்மை பயப்பதாகும்.

இதை ஆதரிக்கும் அதிகாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் எமது நன்றி உரித்து.

ஆசிரியர்கள்

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	தமிழ்த்திரு நாடு வணக்கம்	...	7
2.	நான் யார் தெரியுமா?	...	8
3.	கை கொட்டம்மா	...	9
4.	படித்துச் செய்	...	10
5.	சூரியன்	....	11
6.	பசு	...	13
7.	செய்யப் பழகு	...	15
8.	அப்பியாச பாடம்	...	16
9.	நாய்	...	17
10.	பேராசையுள்ள நாய்	...	18
11.	தாவரம்	...	21
12.	நடித்துக் காட்டுதல்	...	24
13.	மழை	...	25
14.	மணியும் குப்புவும்	...	27
15.	மாடுகள்	...	30
16.	தொழிலாளிகள்	...	33
17.	தென்னந் தோப்புத் திருடன்	...	35
18.	வெண்ணிலா	...	38
19.	கிளியின் விடுதலை	...	39
20.	உலாவப் போகுதல்	...	42
21.	பச்சைக் கிளி	...	44
22.	உழைப்பும் உயர்வும்	...	45
23.	உபயோகத்தைக் கண்டு எழுது	...	48
24.	ஒற்றுமை	...	49

25.	மகாத்மா காந்தி	...	52
26.	எது சரி?	...	54
27.	**ஆகாய விமானம்**	...	57
28.	தினசரிக் குறிப்பு	...	58
	செய்யுள்		
	ஆத்திசூடி	...	61
	உலக நீதி	...	63

1. தமிழ்த்திரு நாடு வணக்கம்



தமிழ்த்திரு நாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா ;
அமிழ்தில் இனியதடி பாப்பா—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

—பாரதியார்

---

2. நான் யார் தெரியுமா ?

பெயர்	தகப்பனுர்	விழா
தாய்	பாடசாலை	வகுப்பு
வயது	ஆண்டு	அளி

1. என் பெயர் சந்திரன்.
2. என் தகப்பனுர் பெயர் ராமன்.
3. என் தாய் பெயர் ஞானம்.
4. எனக்குப்பத்துவயது ஆகிறது.
5. நான் காந்தி பாடசாலையில் படிக்கிறேன்.
6. நான் ஆரும் வகுப்பில் வாசிக்கிறேன்.
7. சென்ற வருஷம் ஐந்தாம் வகுப்பில் படித்தேன்.
8. ஆண்டு விழாவில் எனக்குப் பரிசு அளித்தார்கள்.

3. கைகொட்டம்மா

கைகொட்டம்மா கைகொட்டு
கண்ணே, மணியே கைகொட்டு
தலையாட்டம்மா தலையாட்டு
தாமரைப் பூவே தலையாட்டு
கால் வீசம்மா கால்வீசு
கரும்பே, தேனே கால்வீசு
சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சந்தோஷமாகவே சாய்ந்தாடு.

4. படித்துச் செய்

(மௌனப் படிப்பு)

1. நில்.
2. உட்கார்.
3. எழுந்திரு.
4. கை கூப்பு.
5. வாயை மூடு.
6. கண்ணை மூடு.
7. கண்ணைத் திற.
8. நடந்து செல்.
9. நொண்டி நட.
10. நிமிர்ந்து நட.
11. நாக்கை நீட்டு.
12. குனிந்து நில்.



5. சூரியன்

வெளிச்சம்	ஒளி	பகல்	திசை
வெப்பம்	உஷ்ணம்	இரவு	திக்கு
அதிகம்	குறைவு	வலது	இடது

1. சூரியன் கிழக்குத் திக்கில் உதிக்கிறான். மேற்குத் திக்கில் மறைகிறான். சூரியன் நமக்கு வெளிச்சத்தையும் வெப்பத்தையும் தருகிறான்.

2. சூரியன் ஒளி உள்ள காலத்தைப் பகல் என்கிறோம்? இல்லாத காலம் இரவு ஆகும். காலையிலும் மாலையிலும் சூரிய உஷ்ணம் குறைவு. நடுப்பகலில் வெப்பம் அதிகம்.

3. சூரியன் உதிக்கும் திக்கைப் பார்த்து நில். உனது முன்புறம் கிழக்கு; பின்புறம் மேற்கு; அப்பொழுது உனது வலதுகைப் பக்கம் தெற்கு; இடதுகைப் பக்கம் வடக்கு. ஆகவே கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு எனத் திசைகள் நான்கு.

பயிற்சி

I. கோடிட்ட இடத்தில் ஏற்ற சொற்களை அமைத்து வாசி :—

1. பள்ளிக்கூடம்..........வரிசையில் இருக்கிறது.
2. என் வீடு............வரிசையில் இருக்கிறது.
3. மாலையில் சூரியனைப் பார்த்து நின்றால் எனது வலதுகைப் பக்கம்............
இடதுகைப் பக்கம்.............

II. எதிர்ப் பதங்கள் :—

பகல் × இரவு

ஒளி × இருட்டு

உதயம் × அஸ்தமனம்

உதிக்கிறான் × மறைகிறான்

வெப்பம் × தட்பம்

காலை × மாலை.

III. கீழ் வருவனவற்றிற்கு எதிர்ப்பதங்கள் கூறு :—

பின் ; உஷ்ணம் ; அதிகம்.



6. பசு

அருகில்	தெய்வம்	இனிப்பு	கவி
அன்பு	பொங்கல்	சிறந்த	கழுநீர்
குட்டி	வைக்கோல்	ஆகாரம்	பிராணி
புல்	புண்ணுக்கு	பண்டிகை	தவிடு

1. மேலே இருக்கும் படத்தில் உள்ள பசுவைப் பார். அதன் அருகில் நிற்பது கன்றுக் குட்டி. பசுவுக்கு அதன் கன்றின் மீது மிக்க அன்பு உண்டு.

2. நம் நாட்டில் பசுவைத் தெய்வமாக மதிக்கிறோம். பொங்கல் தினத்திற்கு மறு நாள் மாட்டுப் பொங்கல் பண்டிகை கொண்டாடுகிறோம்.

3. பசு புல், வைக்கோல், பருத்திக் கொட்டை, தவிடு, புண்ணுக்கு முதலியவை

களைத் தின்னும். அரிசி களைந்த கழுநீரைக் குடிக்கும். பசுவைத் தினம் தேய்த்துக் குளிப் பாட்ட வேண்டும்.

4. பசு பால் தரும். பால் சிறந்த ஆகாரம் ஆகும். பசுவின் பால் மிக்க இனிப்பாக இருக்கும். பாலைக் காய்ச்சிச் சாப்பிடவேண்டும்.

5. பசு மிக்க சாதுவான பிராணி. அது நமக்கு மிகவும் உபயோகமுள்ளது. ஆகவே கவி பாரதியார்

"பாலைப் பொழிந்து தரும் பாப்பா—அந்தப்
பசு மிக நல்லதடி பாப்பா"

என்று பாடியுள்ளார்.

பயிற்சி

I. விடை சொல்லு :—

1. பசுவைக் குறித்து நாம் கொண்டாடும் பண்டிகை எது?
2. பசுவுக்கு எதன் மீது அன்பு அதிகம்?
3. பசுவுக்குத் தக்க உணவு எது?

II. பசுவைக் குறித்துக் கவி பாரதியார் பாடிய பாட்டை மனப்பாடம் செய்.

III. கோடிட்ட இடத்தைப் பூர்த்தி செய் :—

1. ஆவின்பால்.........இருக்கும்.
2. பாலை நன்றாய்.........சாப்பிடு.
3. பால் மிகவும் சிறந்த..........

IV. எதிர்ப்பதங்கள் கூறு :—இனிப்பு; மேல்; சாது

7. செய்யப் பழகு

உதட்டை அசைக்காமல் கீழே உள்ளவற்றை மௌனமாய்ப் படி; அப்படியே செய்யப் பழகு.

இது ஒரு கதிர். இது நூல் நூற்க உதவும். நீ பட்டை போட்டு நூல் நூற்கப் பழகு.

இது ஒரு கைராட்டை. இது மரத்தால் செய்யப்பட்டது. இதுவும் நூற்க உதவும். இராட்டை சுற்றுவது நல்ல பழக்கம். நீ சுற்றுவாயா?



இது ஒரு பம்பரம். அது ஒரு கயிறு. நூலால் நீ கயிறு திரிக்கலாம். நீ பம்பரம் ஆடப் பழகு.



இது ஒரு காகிதப் பட்டம். நீ பட்டம் செய்யக்கற்றுக்கொள். பட்டம் காற்றில் மேலே பறக்கும். நீ பட்டம் விடப் பழகு.

8. அப்பியாச பாடம்

கோடு இட்ட இடங்களில் கீழே கொடுத்துள்ள சொற்களை அமைத்துப் படி.

1. இவன் ஒரு....................
2. இவன் மிகவும்...................
3. எப்போதும்......பேசுவான்.
4. இது எங்கள்....................
5. இதில்........... வசிக்கிறோம்.
6. இது.................... அறை.
7. இது..................பாடசாலை.
8. ....நாங்கள் படிக்கிறோம்.
9. எங்கள் ....நல்லவர்.
10. இவர் ....தாத்தா.
11. நான் இவர்....................
12. இவர்............சொல்லுவார்.

[பையன், நல்லவன், உண்மை, வீடு, நாங்கள், படுக்கை, ஒரு, இதில், உபாத்தியாயர், என், பேரன், கதை.]



9. நாய்

வீட்டுவாசல் காப்பவன்
வேட்டையாட வல்லவன்
ஆட்டுக் கிடைப் பாண்டியன்
அன்புமிக்க தோழன்.
உண்ட சோற்றை எண்ணி
உயிரும்விடத் துணிபவன்
மண்டலத்தில் நாய்போல்
வாய்த்த துணை உண்டோ ?

—ஸ்ரீ தேசிகவிநாயகம் பிள்ளை

10. பேராசையுள்ள நாய்

ரொட்டி	கௌவி	வாய்க்கால்	சண்டை
கடை	இடையே	பெருநஷ்டம்	பிடுங்க
பேராசை	உருவம்	எண்ணம்	கரை

1. ஒரு நாய் ஒரு நாள் மிக்க பசியால் வாடி வருந்திற்று. அது அங்கும் இங்கும் ஓடி அலைந்து களைப்படைந்தது. கடைசியாக ஒரு ரொட்டிக் கடையின் முன்பாக உட்கார்ந்திருந்தது. அதற்கு அங்கு ஒரு ரொட்டித் துண்டு கிடைத்தது.

2. நாய் அத்துண்டை வாயில் கௌவிக் கொண்டு போயிற்று. போகும் வழியில் ஒரு வாய்க்கால் ஓடிக்கொண்டிருந்தது. அந்த வாய்க்காலைக் கடக்க ஒரு மரப்பலகை இரு

கரைகளுக்கும் இடையே பாலமாகப் போடப்பட்டிருந்தது.

3. பலகையின் மேல் நாய் நடந்து சென்றபொழுது, கீழே தண்ணீரைப்

பார்த்தது. தன் உருவத்தையே தண்ணீரில் கண்டது. அங்கும் ஒரு நாய் ரொட்டித் துண்டைக் கௌவிக் கொண்டிருப்பதாக எண்ணிற்று.

4. அந்த நாயுடன் சண்டை போட்டு அத்துண்டையும் பிடுங்கிக் கொள்ள எண்ணங் கொண்டது. உடனே வாயைத் திறந்து கொண்டே தண்ணீரில் குதித்தது. அப்போது வாயில் இருந்த ரொட்டித் துண்டு தண்ணீரில் விழுந்தது. நாய் பேராசைப்பட்டு பெருநஷ்டம் அடைந்தது. பின்பு அதைக் குறித்து வருந்திக் கரை ஏறிச் சென்றது.

பயிற்சி

I. விடை சொல் :—

1. நாய் ஏன் வாடி வருந்திற்று ?
2. அதற்குக் கிடைத்தது யாது ?
3. வாய்க்காலைக் கடக்க என்ன உபாயம் செய்யப் பட்டிருந்தது ?
4. நாய் எப்படி ரொட்டித் துண்டை இழந்தது ?

II. எதிர்ப்பதங்கள் :—

கீழே × மேலே திற × மூடு
சண்டை × சமாதானம் வருத்தம் × சந்தோஷம்

எதிர்ப்பதங்கள் கூறு :—தண்ணீர்; நஷ்டம்.

III. வாய்க்கால்களுக்குக் குறுக்கே போடப்பட்டிருக்கும் கட்டைகள் மீது நடக்கப் பழகு.



11. தாவரம்

உடல்	செடி கொடி	தாவரம்
சமையல்	ஆரோக்கியம்	தோட்டம்
பருவம்	ஊறுகாய்	பழரசம்

1. மரம் செடி கொடிகளுக்குத் தாவரம் என்பது பெயர். இடம் விட்டுப் பெயராதவைகளே தாவரங்களாம். தாவரங்கள் நமக்கு மிக உபயோகமுள்ளவை. மேலே உள்ள படத்தில் காட்டப்பட்ட காய்கறிகளை நீ பார்த்திருக்கிருயா ?

1 புடலங்காய், 2 வாழைக்காய், 3 பரங்கிக்காய், 4 பலாக்காய், 5 வெண்டைக்காய்,

6 கத்தரிக்காய், 7 பீர்க்கங்காய், 8 மிளகாய், 9 பாகற்காய்.

2. இவைகளில், மரங்களிலிருந்து கிடைக்கக் கூடியவை எவை? செடிகளிலிருந்து கிடைக் கக்கூடியவை எவை? கொடிகளிலிருந்து கிடைப்பவை எவை? உனக்குத் தெரியுமா?

3. நாம் இக்காய்கறிகளைச் சமைத்துச் சாப் பிடுகிருேம். இவை நமது உடல் நலத்துக்கு அவசியமானவை. தோட்டங்களில் நாம் இவைகளைப் பயிரிடுகிருேம். சில காலங்களில் மாத்திரம் சில காய்கறிகள் நன்ருகப் பயிரா கும். அப்பருவத்தில் அவைகளைப் பயிரிட வேண்டும். **பருவத்தே பயிர்செய்** என்பது நம் நாட்டுப் பழமொழி.

4. வெள்ளரி, கக்கரி, போன்றவைகளைப் பச்சையாகவே சாப்பிடலாம். மாங்காய், எலுமிச்சங்காய், நார்த்தங்காய், நெல்லிக்காய் முதலியன ஊறுகாய்க்கு உதவும். மாங்காய், வாழைக்காய், பலாக்காய் போன்றவைகளைப் பழுத்தபின் சாப்பிடுகிருேம். இப்பழங்களின் ரசத்தை எடுத்துப் பக்குவப்படுத்தி, சீசாக்களில் அடைத்து வைக்கிருர்கள்.

5. நீ உலாவப் போகும்பொழுது சுற்றுப் புறங்களிலுள்ள தாவரங்களின் பட்டியல் ஒன்று தயார் செய். களிமண் கொண்டு காய் கறிகளின் உருவம் செய்து வர்ணமும் தீட்டு.

பயிற்சி

I. விடை சொல் :—

1. தாவரம் என்று எதற்குப் பெயர்?
2. படத்தில் காணப்படாத நான்கு காய்கறிகளின் பெயர்களைக் கூறு.
3. பாகற்காய், மாங்காய், மிளகாய், தேங்காய்—இவைகளின் உருசி எப்படி இருக்கும்?

II. எதிர்ப் பதங்கள் :—

ஆரோக்கியம் × அனாரோக்கியம்

அவசியம் × அனாவசியம்.

காய் × பழம்

III. கீழே கொடுத்திருக்கும் காய்களை ஏற்ற வரிசையில் எழுது.

மரம்	செடி	கொடி

முருங்கை, பூசனி, பீர்க்கு, அவரை, பாகல்' மிளகாய், கத்திரி, வாழை, புடல், நாரத்தை.

12. நடித்துக் காட்டுதல்

கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளை மௌனமாக நடித்துக்காட்டு.

1. துணி துவைத்தல்.
2. நர்த்தனம் செய்தல்.
3. குழல் ஊதுதல்.
4. மோட்டார் விடுதல்.
5. வெற்றிச் சங்கு ஊதுதல்.
6. மாட்டு வண்டி ஓட்டுதல்.
7. சைக்கில் விடுதல்.
8. நெல் குத்தல்.
9. அம்மிமீது அரைத்தல்.
10. வீணை வாசித்தல்.
11. தயிர் கடைதல்.
12. கட்டை உடைத்தல்.
13. ரயில் கத்துதல்.
14. நாதஸ்வரம் வாசித்தல்.
15. தாளம் போடுதல்.

13. மழை

மழை	**வாடிடும்**	**விவசாயிகள்**
வளர	**பஞ்சம்**	**மனக்களிப்பு**
சுகம்	**ஆவல்**	**கஷ்டம்**

1. மழை எல்லோருக்கும் அவசியம். காலத்தில் மழை பெய்தால் பயிர்கள் நன்கு வளரும். பிராணிகளுக்கும் மனிதர்களுக்கும் சுகம் உண்டு.

2. மழை இல்லாவிட்டால் பயிர்கள் வாடிவிடும். மாடுகளுக்குப் புல் கிடைக்காது. நமக்குந்தான் நெல் ஏது? பஞ்சம் வந்தே தீரும். ஆதலால் விவசாயிகளாகிய நாம் ஆவலுடன் மழையை எதிர்பார்க்கிறோம்.

3. மழை பெய்தால் நமக்கு மனக்களிப்பு ஏற்படுகிறது. ஆறுகளிலும் வாய்க்கால்களிலும், குளங்களிலும் நீர் நிரம்பியிருக்கும். குளிக்கவும், குடிக்கவும் தண்ணீர் கஷ்டமே இராது. பயிர்கள் ஓங்கி வளர்ந்து உணவுப் பொருள்கள் நிரம்பக் கிடைக்கும். நாடு செழிப்படையும்.

4. **மாரி அல்லது காரியமில்லை** என்பது நம் நாட்டுப் பழமொழி.

பயிற்சி

I. விடை சொல் :—

1. மழை பெய்வதால் என்ன நன்மை உண்டாகும் ?
2. மழை பெய்யாவிடில் என்ன கஷ்டம் ஏற்படும் ?
4. மழையைக் குறித்த ஒரு பழமொழி கூறு.
5. மழை பெய்யும் காலத்தை மாதவாரியாகக் குறித்து வை.

II. எதிர்ப் பதங்கள் :—

சுகம்	×	கஷ்டம்	உண்டு	×	இல்லை
வாடும்	×	வாடாது.	இருக்கும்	×	இராது

14 மணியும் குப்புவும்

நண்பர்கள்	கர்வம்	வழக்கம்	உலாவ
பந்தயம்	வீண்	திகைப்பு	சமாதானம்
குறும்பு	தூவு	மறுத்தார்	கெடுதல்

1. துகிலி என்னும் கிராமத்தில் மணி, குப்பு என்னும் இரண்டு குழந்தைகள் நெருங்கிய நண்பர்களாக இருந்தார்கள். மணிக்கு வயது எட்டு; குப்புவுக்கு வயது ஏழு.

2. மணி மிக்க புத்திசாலி, ஆனால் அவனுக்குக் கொஞ்சம் குறும்புத்தனம் உண்டு. குப்பு மிக்க சாதுவான பையன். இவர்கள், இதர பையன்களோடு தினந்தோறும் ஆற்று மணலில் விளையாடுவது வழக்கம்.

3. ஒரு நாள் மணி மற்ற பையன்களைப் பார்த்து "நான் கண்களை மூடிக்கொண்டு ஒரு காரியம் செய்கிறேன். அதை நீங்கள் கண்களைத் திறந்துகொண்டு செய்வீர்களா ?" என்று கேட்டான்.

ராஜு என்னும் ஒருவன்:—"இதென்ன, பெரிய காரியம்! நீ கண்களை மூடிக்கொண்டு செய்வதை நாங்கள் கண்களைத் திறந்து கொண்டு செய்ய முடியாதோ! வீண் கர்வப் படாதே ?" என்று சொன்னான்.

மணி :—" நீங்கள் அவ்வாறு செய்யாமற் போனால்.......... ?"

ராஜு :—" ஏன் வீண்பேச்சு, பந்தயம் ரூபாய் ஒன்று வை," என்றான்.

குப்பு :—" பந்தயம் ஒன்றும் வேண்டாம்."

ராஜு :—" வைத்தே தீருவோம் "

4. மணி மணலில் உட்கார்ந்து, கண்களை மூடிக்கொண்டு, மணலை முகத்தின்மீது தூவிக்கொண்டான்; மற்றவர்கள் திகைத்துப் போனார்கள். கண்களைத் திறந்து கொண்டு அவ்வாறு செய்ய மறுத்தார்கள். ஆகவே சண்டை ஏற்பட்டது.

5. அச்சமயம் ஆசிரியர் அசோகர் அங்கு உலாவ வந்தார். சண்டையைக் கவனித்தார். காரணத்தை அறிந்தார். சண்டை வேண்டா மென்றார். சமாதானம் செய்தார். உடனே சண்டை தீர்ந்தது. பந்தயம் போடுதல் கெடுதல் என்றும் அசோகர் புத்திமதி கூறினார்.

பயிற்சி

I. விடை சொல் :—

1. ஆசிரியர் அசோகர் சொன்ன புத்திமதி யாது?
2. குப்பு என்ன சொன்னான் ?

II. இக்கதையை நடியுங்கள்.

III. எதிர்ப் பதங்கள் :—

பெரிய	× சிறிய	திறந்து	× மூடி
மிக	× கொஞ்சம்	வேண்டும்	× வேண்டாம்.

IV.

ஒருமை		பன்மை
நண்பர்	—	நண்பர்கள்
குழந்தை	—	குழந்தைகள்
கண்	—	கண்கள்
பையன்	—	பையன்கள்
ஆசிரியர்	—	ஆசிரியர்கள்
ரூபாய்	—	ரூபாய்கள்.

இவையெல்லாம் பெயர்கள். பெயரைக் குறிக்கும் சொல்லைப் **பெயர்ச் சொல்** என்கிறோம்.



15. மாடுகள்

செல்வம்	**உழைப்பு**	**பிணை**
விவசாயம்	**பரம்பு**	**எரு**
தொழில்	**கவலை**	**ஏர்**

1. மாடு என்பதற்குச் செல்வம் என்பது பொருள். விவசாயமே நம்முடைய முக்கிய தொழில். மாடுகளின் உழைப்பால்தான் பயிர்த் தொழில் நன்கு நடைபெறும்.

2. மாடுகள் ஏர் உழுகின்றன. எருவும் தருகின்றன. பரம்பு அடிக்க நாம் மாடுகளை உபயோகப்படுத்துகிறோம். பயிர்களுக்கு நீர் பாய்ச்சக் கவலை இழுக்கவும் மாடுகள் உபயோக மாகின்றன.

3. மேலும் மாடுகள் பிணை அடிக்கும். நெல் மூட்டைகளை வீடுகளில் கொண்டுபோய்ச் சேர்ப்பனவும் மாடுகளே. மற்ற இடங்களுக்கு

நெல் அனுப்புவதற்கும், வைக்கோல், எரு, தழைகள் கொண்டு போவதற்கும் வண்டிகளில் மாடுகளையே பூட்டுகிறோம்.

4 ஆகவே, உழவர்களுக்கு ஏர் உழுவது முதல் நெல்லை வீட்டிற்குக் கொண்டுவந்து சேர்க்கும் வரை உள்ள ஒவ்வொரு வேலைக்கும் மாடுகள் அவசியம் தேவை. ஆதலால் நாம் மாடுகளை நன்றாகக் கவனத்துடன் வளர்த்து வரவேண்டும். மாடுகளே உழவர்களின் உயிர்நாடி.

பயிற்சி

I. விடை சொல் :—

1. நம் நாட்டின் முக்கிய தொழில் யாது?

2. விவசாயத்திற்கு மாடுகள் எவ்வாறு உபயோகப்படுகின்றன?

3, "மாடுகள் உழவர்களின் உயிர்நாடி"—விளக்கு.

II.

ஒருமை		**பன்மை**
மாடு	—	மாடுகள்
தொழில்	—	தொழில்கள்
பயிர்	—	பயிர்கள்
மூட்டை	—	மூட்டைகள்
வீடு	—	வீடுகள்

இவையெல்லாம் ஒருமைப் பன்மைப் பெயர்களைக் குறிக்கும் **பெயர்ச் சொற்கள்.** ஒரு பொருளைக் குறிப்பது **ஒருமை.** பல பொருள்களைக் குறிப்பது **பன்மை.**


1 2 3

16. தொழிலாளிகள்

விருப்பம்	இடையர்	வைத்தியர்	பொன்
செக்கு	சேணியர்	வழக்காளி	வெள்ளி
இரும்பு	வாணியர்	பத்திரிகை	நோய்

1. பயிர்த் தொழில் செய்பவர் வேளாளர்.
2. மரவேலை செய்பவர் தச்சர்.
3. இரும்புவேலை செய்பவர் கொல்லர்.
4. சுவர் எழுப்புகிறவர் கொத்தர்.
5. பொன் வெள்ளி வேலை செய்பவர் தட்டார்.
6. துணி நெய்பவர் சேணியர்.
7. செக்கு ஓட்டுபவர் வாணியர்.
8. சட்டை குல்லா தைப்பவர் தையற் காரர்.
9. மாடு மேய்ப்பவர் இடையர்.
10. பாறைக்கல் வேலை செய்பவர் கல்தச்சர்.
11. துணி வெளுப்பவர் சலவைக்காரர்.
12. நோய்க்கு மருந்து கொடுப்பவர் வைத்தியர்.
13. மண் பானைகள் செய்பவர் குயவர்.

14. பொருளை வாங்கி விற்பவர் வியாபாரி

15. பாடங்களைக் கற்பிப்பவர் ஆசிரியர்.

16. பத்திரிகை வெளி யிடுபவர்களும் ஆசிரியரே! ஆனல் அவர்களைப் பத்திரிகை ஆசிரியர் என்போம்.

உனக்கு எந்தத் தொழிலில் விருப்பம்?

பயிற்சி

I. விடை சொல் :—

1. கல் தச்சர், தச்சர், இவர்கள் தொழில் யாவை?
2. வியாபாரி செய்யும் தொழில் யாது?
3. இருவகை ஆசிரியர்கள் யாவர்?

II.

ஒருமை		பன்மை
வைத்தியர்	—	வைத்தியர்கள்
இடையர்	—	இடையர்கள்
தட்டார்	—	தட்டார்கள்
தையற்காரர்	—	தையற்காரர்கள்

III.

ஆண்பால்		பெண்பால்
அவன்	—	அவள்
எருது	—	பசு
பையன்	—	பெண்

இவையெல்லாம் பால்களைக் குறிக்கும். பெயர்ச் சொற்கள். **பால்=பகுதி**. ஆணைக் குறிப்பது **ஆண்பால்**. பெண்ணைக் குறிப்பது **பெண்பால்.**

17. தென்னந்தோப்புத் திருடன்.

தீர்மானம் சந்தேகம் திருடன்
இறங்குதல் ஏற்பாடு தோப்பு

1. திருவையாறு என்னும் ஊரில் தென்னை நன்கு வளரும். அந்த ஊரில் கோபாலன் என்ற ஒரு தோட்டக்காரர் வசித்து வந்தார். அவருக்கு ஒரு தென்னந் தோப்பு உண்டு. தேங்காய்கள் திருட்டுப் போகாமல் அவர் தினந்தோறும் காலை, மாலை வேளைகளில் தம் தோப்பைச் சுற்றிவருவார்.

2. ஒரு நாள் சில மரங்களில் காய்கள் குறைந்திருப்பதைக் கண்டு திகைத்தார். யாரோ ஒருவன் காய்களைத் திருடியிருக்கிறான் எனத் தீர்மானித்தார். திருடனைக் கண்டு பிடிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்தார்.

3. அந்த ஊரில் மொட்டு என்ற ஒரு திருடன் இருந்தான். கோபாலனுக்கு அவன் மீது சந்தேகம் உண்டாயிற்று. ஒரு நாள் சாயங்காலம் மொட்டு ஒரு மரத்திலிருப்பதைக் கண்டார். அவன் இறங்கியதும் அவனை அவர் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்.

4. **கோபாலன்:**—"அடே, திருடா, இன்று அகப்பட்டுக் கொண்டாய்! நீ ஏன் என் தோப்புக்குள் வந்தாய்? ஏன் மரத்தின்மீது ஏறினாய்?"

5. **மொட்டு:**—"ஐயா! மாட்டுக்குப் புல் பிடுங்குவதற்காக வந்தேன்."

6. **கோபாலன்:**—"தென்னை மரத்தின் உச்சியில் புல் ஏதடா?"

7. **மொட்டு:**—"உச்சியில் பார்த்தேன்; புல் அகப்படவில்லை. ஆகவே நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே நான் இறங்கி வந்தேன். அல்லவா?"

8. **கோபாலன்:**—"பல நாளைத் திருடன் ஒரு நாளைக்கு அகப்படுவான். நீ இங்கு இனி வந்தால் உன் காலை முறித்து விடுவேன். ஓடிப்போ. இந்தத் தடவை உன்னை மன்னித்தேன்" என்று கூறி, கன்னத்தில் இரண்டு அடிகள் கொடுத்து கோபாலன் அவனை விரட்டி விட்டார்.

பயிற்சி

. விடை சொல் :—

1. கோபாலன் ஏன் காலை மாலை வேளைகளில் தன் தோப்பைச் சுற்றி வந்தார் ?
2. மொட்டு எதற்காகத் தென்னை மரத்தின்மீது ஏறியதாகக் கூறினான் ?
3, கோபாலன் மொட்டுவை என்ன செய்தார் ?

II. **ஒருமை** **பன்மை**

தோட்டம் — தோட்டங்கள்

மரம் — மரங்கள்

திருடன் — திருடர்கள்

காய் — காய்கள்

III. **ஆண்பால்** **பெண்பால்**

தோட்டக்காரன் — தோட்டக்காரி

திருடன் — திருடி

ஒருவன் — ஒருத்தி

இவை யெல்லாம் **பால்களை விளக்கும் பெயர்ச் சொற்கள்.**

IV. அவன்
இவன்
மகன்
பால் காரி
} இவைகளுக்குப் பால் கூறு :—



18. வெண்ணிலா

நிலா நிலா ! வா வா ;
நில்லாமல் ஓடிவா;
மலைமேலே நிற்கவா ;
தத்தித்தோ மென்றாடவா.

தேனும் பாலும் கொண்டுவா ;
தேசம் எங்கும் பாய்ந்துவா;
நானும் நீயும் ஓடவா ;
நல்ல நிலாக் கொண்டு வா.

அம்புலியே ஓடிவா ;
ஆடிப்பாடித் தேடிவா ;
அம்பியுடன் கூடிவா ;
அழகுடன் பாடிவா.

—ரா. வே.



19. கிளியின் விடுதலை

விடுதலை	சாப்பாடு	ஆசை
சந்தை	பணக்காரர்	அருகில்
விதம்	ஆச்சரியம்	வெட்கம்

1. பச்சையாம்பேட்டையில் பசுபதி என்பவன் ஒரு கிளி வளர்த்து வந்தான். அது மிகவும் அழகாக இருந்தது. அதற்குப் பேசக் கற்றுக்கொடுத்தான். "சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை," என்ற விதத்தில் அதற்கு, எப்பொழுதும் "அதற்கென்ன சந்தேகம்," என்று சொல்லும் பழக்கம் உண்டாயிற்று.

2. ஒரு சமயம் பசுபதியிடம் பணம் இல்லை. சாப்பாட்டிற்கு வழி இல்லை. கிளியை விற்றுவிடுவதாக எண்ணினான். வெள்ளிக் கிழமை சந்தைக்கு அதை எடுத்துச் சென்றான்.

3. அந்த அழகான கிளியை ஒரு பையன் பார்த்து, அதை வாங்க ஆசைப் பட்டான். அவன் தகப்பனுர் பெரிய பணக்காரர். அவரும் சந்தைக்கு வந்திருந்தார். பையன் தகப்பனு ரிடம் சொல்லவே, தந்தையும் அதை வாங்க ஆசைப்பட்டார்.

பணக்காரர் :—“ கிளி விற்கிறதற்காகவா, அப்பா ?” என்று கேட்டார்.

பசுபதி :—“ ஆம், ஐயா ”

பணக்காரர் :—“ என்ன விலே ?

பசுபதி :—“ நூறு ரூபாய்.”

4. **பணக்காரர்** :—“ இதென்ன ஆச்சரியமாக இருக்கிறதே! இந்தச் சிறிய கிளியின் விலே நூறு ரூபாயா ?”

5. **பசுபதி** :—இதில் என்ன ஆச்சரியம். வேண்டுமானுல் அந்தக் கிளியையே கேளுங்கள்.

6. பணக்காரர் கிளியைப் பார்த்து“ உன் விலே நூறு ரூபாயா ?” எனவே, கிளி உடனே, “ அதற்கு என்ன சந்தேகம் ” என்றது.

7. பணக்காரர் மிகவும் ஆச்சரியமடைந்து அந்தக் கிளியை நூறு ரூபாய் கொடுத்து கூண்டுடன் வாங்கி வீட்டுக்கு எடுத்துக் கொண்டுபோனுர். கூண்டை ஓர் இடத்தில் மாட்டிவைத்தார். அவர் மனேவி கூண்டின் அருகில் வந்து கிளியை ஆசையுடன் பார்த்தாள்.

மனைவி :—"கிளி வாங்கினீர்களா?"

பணக்காரர் :—ஆம், சுந்தரன் வேண்டினான், நூறு ரூபாய் கொடுத்து வாங்கினேன்.

8. **மனைவி** :—"இதென்ன! இந்தச் சிறு கிளிக்கு நூறு ரூபாய் கொடுப்பதா? பைத்தியக்காரத்தனமாக அல்லவோ இருக்கிறது," என்று கிளியைப் பார்த்துச் சொல்லவே, கிளி "அதற்கு என்ன சந்தேகம்," என்று சொல்லிற்று.

9. ஆகவே பணக்காரர் வெட்கமடைந்து, கிளியைக் கூண்டிலிருந்து எடுத்து வெளியே பறக்கவிட்டு விட்டார்; சுந்தரம் துன்பமடைந்தான்; கிளியோ விடுதலை பெற்றது; மகிழ்ந்து பறந்து சென்றது.

பயிற்சி

I. விடை சொல்:—

1. பணக்காரர் ஏன் கிளியை வாங்கினார்?
2. பசுபதி ஏன் கிளியை விற்றான்?
3. கிளி எவ்வாறு விடுதலை அடைந்தது?

II. **எதிர்ப் பால் கூறு.**

பையன், தந்தை, மனைவி, பணக்காரன்.

III. **பன்மை கூறு.**

கிளி, ரூபாய், பையன், பணக்காரன், குழந்தை, மனைவி.

IV. **எதிர்ப் பதம் கூறு.**

மிகவும், சிறிய, சாயங்காலம், துன்பம்.

20. உலாவப் போதல்

உலாவுதல்	மாணவர்	மோர்
கடைசி	விளையாட்டு	விடை

1. அந்தியூர்ப் பள்ளி ஆசிரியர் மாணவர்களை அழைத்துக்கொண்டு உலாவப் போனார். போகும்பொழுது அவர் பல மரங்களைக் குழந்தைகளுக்குக் காண்பித்தார். கடைசியாக அவர் ஒரு ஆற்றங்கரையில் உட்கார்ந்து அவர்களைச் சாப்பிடச் சொன்னார். சிறிது நேரம் விளையாடின பிறகு, ஆசிரியர் "நாம் பார்த்த மரங்களின் பெயர்களையெல்லாம், சொல்லுங்கள்," என்றார். அவர்களில் ஒவ்வொருவனும் ஒவ்வொரு பெயரைச் சொன்னான். அவை யாவன:—

2. பூவரச மரம், புளியமரம், வேப்பமரம், புங்கன் மரம், சவுக்கு மரம், இலுப்பை மரம், பலாமரம், மாமரம், நாவல் மரம் முந்திரி மரம், ஆலமரம், தென்னை மரம், அரசமரம், கொய்யா மரம், ஈச்சமரம், நாரத்தை மரம், முருங்கை மரம், கருவேல மரம், வாழைமரம், எலுமிச்சை மரம், நுணா மரம்.

3. மேலேயுள்ள மரங்களை யெல்லாம் நீ பார்த்திருக்கிறாயா ? நமக்குப் பழம் தரும் மரங்களின் பெயர்களை எழுது. எந்த மரங்களின் காய்களிலிருந்து எண்ணெய் எடுக்கலாம் ? மோருடன் சேர்க்கும் பழரசம் யாது ?

4. மா, பலா, வாழை—இவைகளின் பழங்களே நம் நாட்டின் முக்கனிகளாகும்.

5. அடுத்த தடவை நீங்கள் உலாவப் போகும் பொழுது, இந்த மரங்களைக் கவனியுங்கள்.

பயிற்சி

நீங்கள் உலாவப் போகும் பொழுது இந்த மரங்களின் பட்டைகளையும், இலைகளையும் சேகரியுங்கள்.

I. விடை சொல் :—

1. முக்கனிகள் யாவை ?
2. சவுக்கு மரம் நமக்கு எப்படி உபயோகப் படுகிறது ?



21. பச்சைக் கிளி

பச்சைக் கிளியே வா வா,
பாலும் சோறும் உண்ண வா,
கொச்சி மஞ்சள் பூச வா,
கொஞ்சி விளையாட வா !

பையப் பையப் பறந்துவா,
பாடிப் பாடிக் களித்து வா,
கையில் வந்தி ருக்க வா,
கனிய ருந்த ஓடி வா !

பவழக் காரத் தெருவி லே,
பவழங் காண வில்லை யாம் ;
எவரெ டுத்துச் சென்ற னர் ?
எனக்க றிந்து சொல்வை யோ ?

பங்க ஜாட்சி கையி லே
பவழங் காண வில்லை யாம் ;
எங்கு முன்னைத் தேடி னர்
எடுத்த துண்டோ தத்தம் மா.

—ஸ்ரீ தேசிகவிநாயகம் பிள்ளை.

22. உழைப்பும், உயர்வும்

தனவான்	இளையவன்	சுறுசுறுப்பு
சோம்பேறி	கட்டளை	கௌரவம்
மூத்தவன்	ஏழை	பாராட்டு

1. கும்பகோணத்தில் ஒரு பெரிய தனவான் இருந்தார். அவருக்கு இரு பையன்கள் உண்டு. மூத்தவன் பெயர் பெரியதுரை; இளையவன் பெயர் சின்னதம்பி.

2. பெரியதுரை முழுச்சோம்பேறி. பிறரை ஏவித் தன் வேலைகளைச் செய்யும்படிக் கட்டளையிடுவான். தானாக ஒரு வேலையையும்

கவனிக்க மாட்டான். வேலையாட்கள் செய்த வேலை சரியாக இருக்கிறதா என்றுகூடப் பார்ப்பதில்லை. நாளடைவில் அவன் ஏழையாகி விட்டான். ஆகவே மிகக் கஷ்டப்பட்டான்.

3. சின்னதம்பியோ மிக்க சுறுசுறுப்பு உடையவன். தன் வேலைகளைச் செவ்வனே கவனிப்பான். பிறருக்கும், அவர்கள் வேலையில் உதவி, செய்வான். ஆதலால் மற்றவர்களும் அவனுக்கு உதவி செய்தார்கள். அவன் மிகப் பணக்காரன் ஆனான். எல்லோரும் அவனை கௌரவமாகப் பாராட்டினார்கள்.

4. பெரியதுரையின் கேவலமான நிலையைக் கண்டு, சின்னதம்பி வருந்தினான். அவன் கூடப்பிறந்த அண்ணன் அல்லவா! பெரிய துரைக்காக ஒரு கடை ஏற்படுத்திக் கொடுத்துத் தானும் அவனுக்கு வேலையில் ஒத்தாசை செய்தான். அவன் குடும்பம் இவனை வாழ்த்தியது.

5. சின்னதம்பியின் அன்பையும், உழைப்பையும், உயர்வையும் கண்டு ஊரில் எல்லோரும் மெச்சினார்கள்.

பயிற்சி

I. விடை சொல்:—

1. சின்னதம்பி எவ்வாறு பணக்காரன் ஆனான்?
2. பெரியதுரை ஏன் கஷ்டப்பட நேரிட்டது?

3. சின்னதம்பி அன்புடையவன் என்று எவ்வாறு தெரிய வருகிறது?

4. நீ இவ்விருவர்களில் யாரைப் போல் இருக்க விரும்புகிறாய்? ஏன்?

5. இக்கதை கற்பிக்கும் நீதி யாது?

II. எதிர்ப்பதங்கள் :—

மூத்தவன் × இளையவன்	தனவான் × ஏழை
அன்பு × வெறுப்பு	கௌரவம் × அகௌரவம்
உயர்வு × தாழ்வு	சோம்பல் × சுறுசுறுப்பு

III. கீழுள்ளவைகளில் தனித்தனி வாக்கியங்களை ஒரே வாக்கியமாக எழுது :—

1. நாளடைவில் அவன் ஏழையாகி விட்டான். மிகவும் கஷ்டப்பட்டான்.

2. தன் வேலையைத் தானே கவனிப்பான். பிறருக்கும் உதவி புரிவான்.

IV.

ஆண்பால்	பெண்பால்
தகப்பன்	தாயார்
அண்ணன்	அக்காள்
தம்பி	தங்கை
மாமன்	மாமி

23. உபயோகத்தைக்கண்டு எழுது

கோடரி	ரம்பம்	இயந்திரம்
மண்வெட்டி	பேனா	கடிகாரம்
அரிவாள்	கதிர்	கண்ணாடி
கலப்பை	வீசனம்	குடை

1. வெய்யிலைத் தடுக்க—————————.
2. மணி பார்க்க——————————.
3. விறகு வெட்ட——————————.
4. நூல் நூற்க——————————.
5. நிலத்தை உழ——————————.
6. மரம் அறுக்க——————————.
7. மண் வெட்டி யெடுக்க——————.
8. முகம் பார்க்க——————————.
9. நெல் அரைக்க——————————.
10. காகிதத்தில் எழுத———————.
11. அறுவடைக்கு——————————.
12. நூல் சுற்ற——————————.

24. ஒற்றுமை

கட்டை	கைகாட்டி	பருமன்
நடு	ஆள்காட்டி	வித்தியாசம்
சுண்டு	மோதிரம்	வாழ்வு

1. உன் கைவிரல்களை நீட்டிப் பார். ஒவ்வொரு கையிலும் எவ்வளவு விரல்கள் இருக்கின்றன ? எல்லா விரல்களும் ஒரு அளவாக இருக்கின்றனவா ?

2. மிகவும் குட்டையான விரல் கட்டை விரல். அதை அடுத்துள்ள விரலை ஆள்காட்டி விரல் என்கிறோம். சாலையில் வழி காண்பிக்கும் கைகாட்டிகளில், ஆள்காட்டிவிரல் நீட்டியிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

3. அடுத்துள்ள விரல், ஐந்து விரல்களுக்கும் நடுவில் இருப்பதால் நடுவிரல் என்று சொல்லப்படுகிறது. எல்லா விரல்களிலும் இதுவே நீளமானது.

4. இதற்கு அடுத்துள்ள விரல் மோதிர விரல் எனப்படும். இது ஏறக்குறைய ஆள் காட்டி விரல் அவ்வளவு நீளம் இருக்கும்.

5. மிகுந்திருப்பது சுண்டு விரல். இது மிகச் சிறியதாயிருக்கும். விரல்கள் நீளத்திலும், பருமனிலும் வித்தியாசப்படுகின்றன. ஆனபோதிலும், வேலைகளில் எல்லா விரல்களும் சேர்ந்தே உபயோகப்படுகின்றன. அதுபோலவே ஒவ்வொரு குடும்பத்திலும் பெரியோர் சிறியோர் எல்லோரும் சேர்ந்தே உழைக்கவேண்டும். உழைத்தால் சுகமாய் வாழலாம்.

சேர்ந்து வாழ்வதே சிறந்த வாழ்வு

பயிற்சி

I. விடை சொல் :—

1. ஆள்காட்டிவிரலுக்கு ஏன் அப்பெயர் வந்தது?
2. மிக நீளமான விரல் எது?
3. மோதிர விரல் எது?

4. "சேர்ந்து வாழ்வதே சிறந்த வாழ்வு", மனப் பாடம் செய்.

II. எதிர்ப் பதங்கள் :—

நீளம் × குட்டை

சிறியோர் × பெரியோர்

நீட்டு × மடக்கு.

III. சரியா, தவறு சொல் :—

1. மிகவும் குட்டையான விரல் கட்டை விரல்.
2. நடுவிரல் எல்லாவிரல்களிலும் குட்டையானது.
3. எல்லாவிரல்களும் ஒரே நீளமாயிருக்கின்றன.
4. நமது கையில் ஐந்து விரல்கள் இருக்கின்றன.

IV. கீழுள்ளவற்றை மௌனமாகப் படி, சொல்லியபடி செய்.

இங்கே வா.	அங்கே போ.
கதவைத் திற.	கதவை மூடு.
புத்தகம் எடு.	பாடம் படி.
காப்பி எழுது.	கணக்குப் போடு.



25. மகாத்மா காந்தி

தலைவர்	தைரியம்	உற்சாகம்	வீரர்
பெரியார்	முறை	பிரியம்	விஜயம்
அறிவு	பக்தி	வேடிக்கை	பிதா

1. மகாத்மா காந்தி நம் நாட்டின் சிறந்த தலைவர் ஆவர். உலகப் பெரியார்களில் அவர் ஒருவர். அவர் நல்ல அறிவும், தைரியமும் உடையவர்; மிக்க தெய்வ பக்தியு ம்உள்ளவர். பெரிய பணக்காரக் குடும்பத்தில் பிறந்த போதிலும், அவர் எளிய முறையில் வாழ்ந்து வந்தார்.

2. மகாத்மா காந்தி மிக உற்சாகம் கொண்டவர். குழந்தைகளிடத்தில் அவருக்குப்

பிரியம் அதிகம். அவர்களிடம் வேடிக்கையாகப் பேசுவார்; கொஞ்சிக் குலாவி விளையாட்டிலும் கலந்து கொள்வார்.

3. மகாத்மா காந்தி ஓர் வீரர். நாட்டின் விடுதலைக்குப் போர் புரிந்தார். அப்போர் கத்தி இல்லாப் போர்; அஹிம்ஸைப் போர் என்று பெயர் பெற்றது. நாடு சுதந்தரம் பெற்றது.

4. காந்தி எளியவர்களிடம் அன்பு கொண்டவர். ஒரு சமயம் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்தார். சிறு துண்டை மட்டும் ஆடையாகக் கொண்ட தமிழ் நாட்டுக் குடியானவனைப் பார்த்தார். தாமும் ஒரு சிறு துண்டையே உடுத்துவதாகச் சொன்னார். கடைசிவரை இந்த எளிய உடையே அவருடைய உடையாயது.

5. எல்லோரிடத்திலும் அவர் அன்பாகவே இருந்தார். எப்பொழுதும் உண்மையையே பேசுவார். பிறருக்கு ஒருபொழுதும் தீங்கு செய்ய மாட்டார். அவரை நம் நாட்டின் பிதாவென்று மதிக்கிறோம். அவருடைய வாழ்க்கை முறையை நாம் பின்பற்றுவோமாக.

பயிற்சி

விடை சொல்:—

1. மகாத்மா காந்தியை உலகம் பெரியவராகக் கருதுகிறது; ஏன்?
2. அவருடைய நற்குணங்கள் யாவை?

26. எது சரி?

நண்பர்கள்	குறை	லாபம்	தவிப்பு
ஆப்பம்	உழைப்பு	தெளிவாக	அறியாத
பார்வை	நாணயம்	அநியாயம்	வாழ்த்தி

1. கோவிந்தன் ஆப்பம் வாங்கக் கடைக்குச் சென்றான். அங்கு தன் இரு நண்பர்கள் கந்தன், பாலு இருக்கக் கண்டான். அவர்கள் அங்கு ஆப்பம் வாங்க நின்றுகொண்டிருந் தார்கள்.

2. ஆப்பக்காரி மிக வயதானவள். கண் பார்வை குறைவு; காதும் நன்றாகக் கேட்காது. தெளிவாகப் பேசவும் முடியாது. இருந்தாலும்

உழைத்தே உண்பாள். கோவிந்தன் அவளிடம் ஒரு எட்டு அணு நாணயத்தைக் கொடுத்து ஐந்து அணுக்களுக்கு ஆப்பங்களை எண்ணி வாங்கினுன். கிழவி அந்த நாணயத்தை ஒரு ரூபாய் நாணயம் என்று நினைத்து மீதி பதினெரு அணுக்களைக் கோவிந்தனிடம் கொடுத்தாள்.

3. இதைக் கண்ட கந்தன், கோவிந்தனை அழைத்துக்கொண்டு வெளியே சென்றுன். பாலுவும் பின்தொடர்ந்தான்.

4. **கந்தன்** :—"கோவிந்தா! இன்று நமக்கு லாபம் அணு எட்டு; வா, படம் பார்க்கப் போகலாம்."

5. **பாலு**—"பாவம், வயதான கிழவி, தெரியாமல் அதிக பணம் கொடுத்து விட்டாள். அவளிடம் திரும்பக் கொடுத்துவிடு, கோவிந்தா!

6. **கோவிந்தன்**:—"நான் என் தகப்பனரிடம் கொண்டுபோய்க் கொடுத்துவிடுகிறேன். அவர் என்ன சொல்லுகிருரோ அப்படியே செய்கிறேன்."

7. **கந்தன்**:—" அது வேண்டாம்; மிட்டாய்க் கடைக்குச் சென்று நாம் எல்லோரும், மைசூர்ப் பாகு வாங்கிச் சாப்பிடுவோம். பணத்தைத் திருப்பிக் கொடுக்கக்கூடாது.

8. **பாலு:**—"கிழவி பணம் குறைந்திருக்கிற தென்று தவித்துக் கொண்டிருப்பாள், உடனே கொண்டுபோய்க் கொடுப்போம். அநியாயமாக நடக்கக் கூடாது, கந்தா!"

9. கோவிந்தனும் மற்ற இருவரும் ஆப்பக்காரியினிடம் சென்று அந்த எட்டணுக் களைத் திருப்பிக் கொடுத்தார்கள். தான் அதிக பணம் கொடுத்ததை அறியாத கிழவி, அவர் களை வாழ்த்தி, தலைக்கு ஒரு ஆப்பம் கொடுத் தாள்.

பயிற்சி

I. விடை சொல் :—

1. இக்கதையைப் படித்துப் பார். யார் சொன்னது சரி?
2. ஆப்பக்காரியினிடம் உள்ள நற்குணம் யாது?

II. **எதிர்ப் பதங்கள் :—**

நண்பர்கள் × விரோதிகள் குறை × நிறை

லாபம் × நஷ்டம் நியாயம் × அநியாயம்

III. எதிர்ப்பதம் கூறு :—சரி ; குறைவு ; நற்குணம்.



27. ஆகாய விமானம்

வானம் மீது எழுவேன்—அங்கே
வட்டம் சுற்றிடுவேன்
கானம் மலை எல்லாம்—யான் ஓர்
கணத்தில் தாண்டுவேன்
இடைவிடாது தபால்—உலகில்
எங்கும் கொண்டு செல்வேன்
சடைவிலாமலே பலரைத்
தாங்கியும் போவேன்.

—ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளை

28. தினசரிக் குறிப்பு

நாள்தோறும் நாம் செய்யும் வேலையைக் குறித்து வைத்தல் நல்ல பழக்கமாகும். கீழுள்ள தினசரிக் குறிப்பைப் படித்துப் பார். இது சாந்தா என்ற பெண்ணின் குறிப்பு.

10-12-52.

5-50 மணிக்கு படுக்கையைவிட்டு எழுந்தேன்.

6-0 மல ஜலம் கழித்தேன்.

6-15 பல் தேய்த்தேன்.

6-45 குளித்துத் துணி துவைத்தேன்.

7-0 கடவுளை வணங்கினேன்.

7-30 தாய்க்குத் துப்புரவு வேலையில் உதவினேன்.

7-45 கஞ்சி குடித்தேன்.

8-15 காய்கறிகள் வாங்கி வந்தேன்.

8-45 நூல் நூற்றேன்-62 சுற்றுகள்.

9-0 பள்ளிக்குச் சென்றேன்.

9-30 கொடி வணக்கம்—தேசியப் பாட்டுகள்.

10-0 துப்புரவு வேலை.

10-45 பருத்தி சுத்தம் செய்தேன்.

11-15 இராட்டையில் நூற்றேன்-72 சுற்றுகள்.

12-0 பட்டைபோடுதல்.

12-30 (வீட்டில்) பகல் சாப்பாடு.

1-30 பத்திரிகை, கதைப் புத்தகம் படித்தல். அரிசி சுத்தம் செய்தல்.

2-0 நூல் நூற்றேன்—74 சுற்றுகள்.

2—2-40 தமிழ்—1 பக்கம் நடந்தது (38)

2-40—3-20 சமூக நூல்—கூட்டம்.

3-20—4 கணிதம்—3 கணக்குகள் கற்றேன்.

4—4-30 தோட்ட வேலை — பாத்தி கட்டினேன்.

4-30—5-15 விளையாடினேன்.

5-15—6-0 விளக்குகளைத் தயாரித்து வைத்தேன்.

7-0 ஓய்வு.

7-30 பாட்டுப் பாடினேன்.

8-0 சாப்பாடு.

9-0 புத்தகங்கள் படித்தேன்.

9-30 கடவுள் பிரார்த்தனை செய்து உறங்கச் சென்றேன்.

இந்தப் பெண் எவ்வளவு சுறு சுறுப்பாக வேலை செய்கிறாள் பார். தன் வேலைகளைத் தானே செய்து கொள்ளுகிறாள். தாய்க்கு உதவுகிறாள். நூற்பு வேலை செய்கிறாள். புத்தகங்கள் படிக்கிறாள். நன்றாக விளையாடுகிறாள். இனிமையாகப் பாடுகிறாள். பள்ளிவேலைகளையும், வீட்டு வேலைகளையும் நன்றாகக் கவனிக்கிறாள். நல்ல பழக்க வழக்கமுள்ளவளாக இருக்கிறாள்.

இக்குழந்தையைப் போல் நீங்களும் உழைத்திடவேண்டும். தினசரிக் குறிப்புகள் வைக்கும் பழக்கம் உங்களுக்கும் உண்டாகட்டும். தினசரிக் குறிப்புகளைத் தெளிவாக எழுதுங்கள். உங்கள் வாழ்க்கை திருந்தும்.

ஆத்தி சூடி

1. அறம் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண்ணெழுத் திகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயமிட்டு உண்.
10. ஒப்புர வொழுகு.
11. ஓதுவது ஒழியேல்.
12. ஔவியம் பேசேல்.
13. கண்டொன் று சொல்லேல்.
14. ஞயம்பட உரை.

15. தந்தை தாய்ப்பேண்.

16. நன்றி மறவேல்.

17. வஞ்சகம் பேசேல்.

18. சுளிக்கச் சொல்லேல்.

19. சூது விரும்பேல்.

20. செய்வன திருந்தச் செய்.

21. சேரிடம் அறிந்து சேர்.

22. சோம்பித் திரியேல்.

23. தெய்வம் இகழேல்.

24. வீடு பெற நில்.

25. கேள்வி முயல்.

26. நூல் பல கல்.

27. மிகைபடச் சொல்லேல்.

28. இணக்கமறிந்து இணங்கு.

29. உத்தமனாய் இரு.

30. ஊருடன் கூடிவாழ்.

II. உலக நீதி

ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்.
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்.
நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம்.
நல்லிணக்கம் அல்லாரோடு இணங்க வேண்டாம்.
அஞ்சாமல் தனிவழியே போகவேண்டாம்.
அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்.
மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்.
தனந்தேடி உண்ணுமற் புதைக்க வேண்டாம்.
தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
சினந்தேடி அல்லலையுந் தேட வேண்டாம்.
சினத்திருந்தார் வாசல் வழிச் செல்ல வேண்டாம்.
குற்றமொன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்.
கொலைகளவு செய்வாரோடு இணங்கவேண்டாம்.
கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்.
கொற்றவனோடு எதிர்மாறு பேச வேண்டாம்.
கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்.

2326

ASOKA VACHAKAM

(TAMIL)

BOOK·II — STANDARD II

ALL INDIA PUBLISHING CO.

Post Box 36
VELLORE.

MALLESWARAM
BANGALORE-3.

DABIR STREET
KUMBAKONAM.